Kalki Book 26.12.2010.

# இனி... ஆகாயத்தாமரை அம்பேல்!

இதர நீர்த் தாவரங்களைக் காட்டிலும் ஒன்பது மடங்கு நீரை உறிஞ்சி ஆவியாக்கி, நீர் இருப்பினை வெகுவாகக் குறைத்து, நீரோட்டத்தைத் தடுத்து, வெள்ளக் காலங்களில் பெரும் சேதங்களை விளைவிக்கக் கூடியது இந்த ஆகாயத் தாமரை.

Water Hyacinth எனப்படும் இந்த ஆகாயத் தாமரையினை, சிற்சில பகுதிகளில் வெங்காயத் தாமரை என்றும் வெண்ணெய்த் தாமரை என்றும் குறிப்பிடுகின்றனர்.

பிரேசில் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான இந்த நீர்வாழ் தாவரம், 1890ல் மேற்கு வங்காளத்துக்குள் நுழைந்தது. ஆகாயத் தாமரை நூற்றியிருபது ஆண்டுகளில் இந்தியா முழுவதுமாகப் பரவிப் படர்ந்துவிட்டது.

பாசன வாய்க்கால், ஏரி, குளம், குட்டையென எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் இதை புல்டோசர் அல்லது ஜே.சி.பி. எந்திரம் வைத்து, அப்புறப்படுத்தினாலும் சில மாதங்கள் கழித்துப் பார்த்தால் அதே பாசன வாய்க்காலில் முன்பு படர்ந்திருந்தது போலவே நிறைந்திருக்கும். ஆகாயத் தாமரைகளை அடியோடு அழித்தொழிக்க என்னதான் வழி? பல்வேறு கட்ட ஆய்வுகளில் களமிறங்கியது உழவியல் துறை.

இதை அழிக்கும் ஆய்வில், பிரேசில் நாட்டில் இந்த நீர்வாழ் தாவரத்துக்குத் தீங்கு செய்யும் கெட்டினா (Neo Chetina) எனப்படும் பூச்சி வகை எனக் கண்டறியப்பட்டது. அதைக் கொண்டு பெங்களூரு உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு ஆய்வு நிலையத்தில் இனப்பெருக்கம் செய்யப்பட்டது. நியோ கெட்டினா பூச்சிகள், இந்தத் தாவரங்களைத் தவிர வேறெதையும் உண்ணாது. நியோ கெட்டினா பூச்சிகள் இலைகளை, தண்டுகளை அரித்துத் தின்றுவிடும். மேலும் கற்பூரவல்லி எனப்படும் ஓமவல்லி இலைப் பவுடரை, சற்றே அரிக்கப்பட்டிருக்கும், ஆகாயத்தாமரைச் செடிகளின் இலைகள் மீது தூவினால் மூன்றே நாட்களில் ஆகாயத் தாமரைச் செடிகள் அதன் வேர்களோடு முழுவதுமாகச் செத்துப் போகிறது. "இதன் முழுமையான ஆய்வு முறைகளை மத்திய அரசின் தேசிய வேளாண் தொழில் நுட்பத் திட்டத் துறையிடம் சமர்ப்பித்துள்ளோம்!. அரசு ஓ.கே சொன்னால் ஆகாயத் தாமரை அட்டகாசம் அம்பேல்தான்'' என்கிறார் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உழவியல் துறைத் தலைவர் இராம. கதிரேசன்.







* இராம. கதிரேசன்

"அரசு ஓ.கே. சொன்னால் ஆகாயத் தாமரை அட்டகாசம் அம்பேல்தான்."

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


## ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள்
# மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ.3, அப்துல் ரசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
☎ : 2435 1190, 2433 2047. செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.